**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.749/2023**
**வழக்கு சாட்சி PW– 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லெட்சுமணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 07th, 2025.

**(4ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். 26.09.2022ம் தேதியில், ராம்நகரில் இருந்து நானும், சாட்சி ரமேஷ்கண்ணனும் வந்து கொண்டிருந்தோம். ராம்நகர் விலக்கில் போலீசார் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது பகல் சுமார் 12.00 மணியிருக்கும். போலீசார் வழக்கின் எதிரி அண்ணாமலையை கைது செய்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதன் மூலம் அரிவாள், கம்பை கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டு கொடுத்தோம்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3. அத்தாட்சி அ.சா.ஆ.4. வெள்ளை நிற கார் ஒன்றையும் போலீசார் கைப்பற்றினார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நானும், அ.சா.1ம் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கண்ணப்பன் தாக்கப்பட்டது சம்பந்தமாக ஊரில் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2–3 நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள். அவ்வாறு போலீசார் ஊரில் விசாரிக்கும் போது தான், என்னிடமும், ரமேஷ் கண்ணனிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்டு கொடுத்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே எழுதி வைத்த பேப்பரில் தான் நானும், ரமேஷ் கண்ணனும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட பேப்பர் கைப்பட எழுதப்பட்டிருந்தது. அதை ஆய்வாளர் தான் எழுதினார். நான் தட்டச்சு செய்த பேப்பரில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். எங்களோடு சேர்ந்து போலீசாரும் கையெழுத்து போட்டார்களா? என்றால் இல்லை. என்னை சாட்சியாக இருக்குமாறு கண்ணப்பன் தான் அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. இன்றைக்கு கண்ணப்பன் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். ராம்நகர் விலக்கிற்கும், எங்கள் ஊருக்கும் 6 கி.மீ தூரம் இருக்கும். ராம்நகர் விலக்கு என்பது ஒரு நாலுமுக்கு சந்தை என்றால் சரிதான். அந்த விலக்கில் தென்புறம் போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். ராம்நகரிலிருந்து 4 கி.மீ தொலைவில் ஆலங்குளம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். 4–5 போலீசார் இருந்தார்கள். அண்ணாமலை என்ற நபரை நான் முன் பின் பார்த்ததில்லை என்றால் சரிதான். அரிவாள் எடுத்தது போன்ற விபரங்கள்

போலீசார் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இரண்டு கையெழுத்துக்கள் போட்டேன். எத்தனை பக்கம் எழுதப்பட்டது என்று எனக்கு நியாபகமில்லை. கைப்பற்றப்பட்ட காரின் எண் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட அரிவாள் என்ன வகையானது, என்று எனக்கு தெரியாது. அரிவாள் எவ்வளவு நீளம் இருக்கும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது கைப்பிடி உள்ள அரிவாளா? கைப்பிடி அற்ற அரிவாளா? என்ற எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அது கைப்பிடி உள்ள அரிவாள் தான். கம்பு என்ன வகையான கம்பு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கண்ணப்பனை தாக்கிய நாளிலிருந்து 3 தினங்கள் கழித்து இந்த கையெழுத்தை போட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் கையெழுத்து போட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. கண்ணப்பனும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதினால், கண்ணப்பனுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரியல்ல. என் முன்பாக வைத்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்பாக வைத்து எந்த அத்தாட்சியும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்பாக வைத்து சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு, தற்போது ராம்நகர் விலக்கு அருகே வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக

கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் ராம்நகர் விலக்கிற்கு செல்லவில்லை என்றாலும், அங்கு வைத்து நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.